ISSN : 2456-821X.

புதிய அவையம்

Vol. 09, Issue – 02, December - 2025

கட்டுரை பெறப்பட்டது : November - 2025 கட்டுரை ஏற்கப்பட்டது : December – 2025

# திருச்சிராப்பள்ளியில் பீடித் தொழிலும் முஸ்லிம் பெண் பீடித் தொழிலாளர்களும்

**அ. ஜவஹர் பாஷா,**

முனைவர் பட்ட ஆய்வாளர் (ப.நே.),

பதிவு எண்: BDU2120632779061,

முதுகலை & தமிழாய்வுத்துறை,

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி

பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது,

**முனைவர் அ.சையத் ஜாகீர் ஹசன்,** இணைப்பேராசிரியர்,

முதுகலை & தமிழாய்வுத்துறை,

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி,

பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது.

**ஆய்வுச்சுருக்கம்**

உழைத்தக் களைப்பிலிருந்து புத்துணர்ச்சிப் பெறுவதற்கு பீடி புகைப்பது தொழிலாளர்களிடம் பரவலானது. பீடி விலை மலிவானது.**புகையிலை மற்றும் டெண்டு** இலை பீடிக்கான மூலப்பொருட்களாகும்.தென்அமெரிக்க நாட்டுத் தாரவமான புகையிலை, ஐரோப்பிய காலனியத் தொடர்பால் உலகெங்கும் பரவலானது. 17 ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்து சேர்ந்து குஜராத் மற்றும் ஆந்திர மாநிலங்களில் விளைபொருளானது. காலக்கிரமத்தில் தமிழகப் பகுதிகளிலும் பயிரிடத் தொடங்கினர்.

ஆனால், சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னர்தான் பீடித்தொழில் தமிழ்நாட்டிற்குள் நுழைந்தது. சேலம், திருச்சிராப்பள்ளி, வட ஆற்காடு, திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் புகையிலைப் பயிர் பெரும் வரவேற்பைப் பெற்றது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஆயிரக்கணக்கானத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளித்த பீடித்தொழில் நிறுவனங்கள் செயல்பட்டதை பதிவேட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. பீடி சுற்றும் தொழிலில் பெரும்பாலும் பெண்களே அதிக எண்ணிக்கையில் இருந்து வந்துள்ளனர். பெண்கள் வீட்டிலிருந்தபடியே செய்வதற்கு ஏற்றதொரு தொழிலாகும். இது பீடி சுற்றும் தொழிலில் முஸ்லிம் பெண்களே அதிகமாக ஈடுபட்டு வருகின்றனர். பீடி சுற்றும் தொழில் முஸ்லிம் பெண்களின் சமூகப் பழக்கவழக்கங்களுக்கு (தேவையில்லாமல் வீட்டைவிட்டு வெளியில் செல்லாமை) ஏற்றதொரு தொழிலாகக் கருதப்படுகிறது. பெரும்பாலும் வறுமைக்கோட்டில் வாழும் முஸ்லிம் குடும்பங்கள் பல பீடித்தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. குடும்பத்திலுள்ள பெண்கள், குழந்தைகள் என அனைவரும் இத்தொழிலில் ஈடுபடுகின்றனர். இதனால் பீடித்தொழிலாளர்களின் பிள்ளைகள் படிப்பு இத்தொழிலுக்கு பலியாகிப்போனது. பல ஏற்றத்தாழ்வுகளுக்கிடையே 1990 ஆம் ஆண்டு வாக்கில் அரசின் கொள்கை முடிவுகள், புகைபிடிப்பதினால் ஏற்படும் சுகாதாரக்கேடு குறித்த விழிப்புணர்வு போன்ற காரணங்களினால் பீடித்தொழில் நசிந்துபோனது. இதன் காரணமாக இத்தொழிலில் ஈடுபட்டிருந்த பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டனர். தமிழ்நாட்டில் தற்போது அங்கொன்றும் இங்கொன்றுமாக குறைவான முதலீட்டில் பீடித்தொழிற்சாலைகள் இயங்குகின்றன.1980களில்

திருச்சிராப்பள்ளியில் பெரும் முதலீட்டில் சுமார் 25 தொழிற்சாலைகள் இயங்கி வந்த நிலையில் தற்போது 10 தொழிற்சாலைகள் மட்டுமே உள்ளன. இதிலும் முஸ்லிம் பெண்களே அதிக எண்ணிக்கையில் ஈடுபட்டுள்ளனர். பெரும்பாலும் இளையத் தலைமுறையினர் இத்தொழிலில் ஈடுபடுவது குறைந்து வருகிறது. குறைவான கூலி, அதிகமான உடலுழைப்பு, சுகாதாரக்கேடு, என்றுமே ஏற்றத்தைக் காணமுடியாத நசுக்கப்பட்ட பொருளாதார சூழல் முதலியவற்றுடன் உழன்று கொண்டிருக்கும் முஸ்லிம் பெண் பீடித்தொழிலாளர்கள் குறித்ததொரு ஆய்வாகும் இக்கட்டுரை.

**குறிப்புச் சொற்கள்**

புகையிலை - பீடித்தொழில் நிறுவனம் - முஸ்லிம் - பெண்

**முன்னுரை**

**பீடி புகைக்கும் பழக்கம்: உழைக்கும் சமுதாயத்தினர் மற்றும் உடலுலைப்புத் தொழிலாளர்களிடையே பரவலாக பயன்பாட்டிலுள்ளது. 'பீடி' ஒரு வகை இலையில் புகையிலைத்தூள் வைத்து சுருட்டித் தயாரிக்கப்படுகிறது. இது விலை மலிவானது. பெருகிவரும் வாழ்க்கை பிரச்சனைகளின் பதட்டத்தை சிறு அளவிலாவது தவிர்ப்பதாக நம்பி பீடி புகைக்கும் பழக்கம் மக்களிடம் வேரூன்றி இருக்கின்றது. தமிழ்நாட்டு பண்டைய சித்த வைத்திய முறையில் சில வியாதிகளைப் போக்குவதற்கு சில வகை மூலிகைச் செடிகளின் இலையை உலர்த்தித் தூளாக்கி அதனைத் தடிமனான பூவரசு போன்ற இலைகளில் வைத்து சுருளாகச் சுருட்டி புகைக்கும் பழக்கம் இருந்ததை அறிய முடிகிறது.**

**இந்தியாவில் புகையிலை அறிமுகமானபோது அதன் புகை உற்சாகம் அளிப்பதாக இருந்ததை அறிந்து கொண்ட மக்கள், மூலிகைக்கு பதிலாக புகையிலைத் தூளை வைத்து புகைத்து வந்துள்ளனர் என்ற செய்தியும் தெரிய வருகிறது.**

**புகையிலையின் தாவரப்பெயர் நிக்கோட்டியான டபாக்கம் (Nicodiana Tobaccum) என்பதாகும். இப்பெயரின் பின்னொட்டான 'டபாக்கம்' என்பது புகையிலையின் அமெரிக்கப் பெயர்களான Tabak, Tabok, Tambok போன்றவற்றிலிருந்து பெறப்பட்டதாகும். தென் அமெரிக்கக் கண்டத்திலிருந்து உலகின் மற்ற பகுதிகளுக்குப் பரவிய ஐந்து முக்கிய தாவரங்களுள் இதுவும்**

**ஒன்றாகும். உருளைக்கிழங்கு, மக்காச்சோளம், தக்காளி, மிளகாய் ஆகியன ஏனைய நான்காகும். இவை 'கொலம்பஸ் பரிமாற்றம்' எனப்படும்.**

"தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் போன்ற இடங்களிலும் மலையாளம், பாலக்காடு, சிலோன் முதலிய இடங்களில் பயிரிடப்படுகின்றன"

(பால வாசகம் (ஐந்தாம் வகுப்பு), ப. 80)

**பீடி சுற்றப் பயன்படும் முக்கியமான இரண்டு வித இலைகளாவன: 1.டெண்டு-Tendu எனப்படும் டயாஸ்பைராஸ் மேலனோசைலான் (Dyospyros Melanoxylon) 2.பாஹினியா ரெசிமோசா (Bauhinia Recemosa). இவை 'பீடி இலை மரம்' என்றே அழைக்கப்படுகின்றன. இவற்றுள் டெண்டு இலைதான் தமிழகப் பகுதியில் பீடி சுற்றுவதற்குப் பயன்பாட்டில் உள்ளது.**

**பீகார், ராஜஸ்தான், ஒடிசா போன்ற மாநிலங்களில் பயிராகும் 'டெண்டு' இலை பீடி சுற்றுவதற்கு ஏற்ற மூலப்பொருளாகக் கண்டறியப்பட்டது. 1910-1920களில் இரயில் போக்குவரத்து அதிகரித்தபோது, டெண்டு இலை மற்றும் புகையிலை வகை ஆந்திரம், கர்நாடகம், சென்னை ஆகிய தென்னிந்திய மாநிலப் பகுதிகளுக்குப் பயிராக வந்துசேர்ந்தன.பீடி சுற்றும் தொழிலுக்கு பெரிய இயந்தியரங்களோ, தொழில்நுட்பமோ தேவை இல்லை. உடலுலைப்பு மட்டுமே போதுமானது. எனவே இது சாமானிய மக்களின், குறிப்பாக பெண்களின் கைத்தொழிலாக உருவெடுத்தது.இந்திய சுதந்திரப்போராட்டத்தின் தொடக்கக் காலக்கட்டமான 1920-1930களில் மக்கள் சுதேசிப் பொருட்களை உபயோகிக்க வேண்டுமென்ற இயக்கம் வலுவடைந்தபோது அப்போது அந்நிய நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்ட சிகரெட்டுக்கு பதிலாக, படித்தவர் பாமரர் என்ற பாகுபாடின்றி பீடியை உபயோகிக்கத் தலைப்பட்டனர். சிகரெட்டை விட பீடியின் விலை குறைவாக இருந்ததால் இதன் உபயோகம் பன்மடங்கு பெருகி இந்தத் தொழில் வெற்றிப் பாதையில் நடைபோடலானது.சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பு 'பீடி' புகைக்கும் பழக்கம் வழக்கத்திற்கு வந்த குறைந்த காலத்திலேயே நகர்ப்புறங்களிலும் நாட்டுப்புறங்களிலும் ஏற்றம் கண்டு மக்களின் வாழ்க்கை முறையோடு, குறிப்பாக அடித்தட்டு உழைக்கும் வர்க்கத்தின் கலாச்சாரத்தோடும் ஒன்றி இருந்து வருவதை காண்கிறோம். பீடி புகைத்தல் உடல் நலத்திற்குத் தீங்கானது என்ற போதிலும் அதன்**

உபயோகமும் பரந்துபட்டு இருந்து வருவதை காணமுடிகிறது. புகைப்பது தீங்கானது, எனவே அதனைத் தவிர்க்க வேண்டுமென்ற பிரச்சாரத்தினை அரசு மேற்கொண்டுள்ள போதிலும், மற்றொரு பக்கம் அரசு விதிக்கும் வரிகளின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் பீடி, சிகரெட்களின் விலை ஏறுகிறது. இதன் மூலம் புகை பிடிக்கும் பழக்கம் குறைவது என்பதைவிட மக்களின் செலவு விகிதமே அதிகரித்து வருகிறது.

பீடி சுற்றும் தொழில் இந்தியா முழுவதும் ஒரு குடிசைத் தொழிலாகவே உள்ளது. தமிழகத்தில், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, வட ஆற்காடு மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் அதிகமாக நடைபெற்று வருகிறது. பெரும்பாலும் பெண்களே பீடி சுற்றும் தொழிலில் ஈடுபடுகின்றனர். வீட்டில் இருந்தபடியே செய்வதற்கேற்ற தொழிலாக இருப்பதால் இது பெண்களுக்கு ஏற்றத் தொழிலாக உள்ளது. ஏழ்மை, சுகாதார அச்சுறுத்தல், குறைந்த வருவாய் என்ற கட்டமைப்புகளோடு காலம்காலமாக இந்த வேலை செய்வோரின் எண்ணிக்கை தற்போது குறைந்துவிட்டபோதிலும், இன்றும் ஆயிரக்கணக்கானப் பெண்கள் இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். திருச்சிராப்பள்ளியிலும் பீடித்தொழில் பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது.

பீடித்தொழிலின் வரலாறு

இந்தியாவில் புகையிலை பற்றிய குறிப்பு முதன் முதலில் 1633ஆம் ஆண்டில் கிடைக்கிறது. இந்தியாவில் கி.பி. 1605-1627 வரை நடைபெற்ற ஜஹாங்கீரின் ஆட்சிக்காலத்தில் புகையிலை இந்தியாவில் அறிமுகமானது. இச்செய்தி அவரது சுயசரிதை நூலான "துசுக்-இ-ஜஹாங்கிரி"யில் இடம் பெற்றுள்ளது. ஆனால் தமிழ்நாட்டில் திருநெல்வேலிப் பகுதியில் இதற்கு முன்பே புகையிலை அறிமுகமாயிருந்தது. அதே போல பீஜப்பூர், கோல்கொண்டா ஆகிய பகுதிகளில் 1618ஆம் ஆண்டு வாக்கில் புகையிலை புழக்கத்தில் இருந்துள்ளது.

(புகையிலை வரலாறும் வழக்காறும், ப. 38)

புகையிலையின் புகை புத்துணர்வை தூண்டுவதைக் கண்டுகொண்ட மக்கள் முதலில் புகையிலைத் தூளைக் கொண்டு 'ஹுக்கா' மூலம் பலர் ஒன்றுகூடி புகைக்கும் பழக்கம் ஏற்பட்டது. பிறகு அவரவர் விருப்பத்திற்கேற்ப புகைக்க விரும்பிய மக்கள், சற்று தடிமனான இலையில் (பூவரசு, மா, தாழை) புகையிலைத் தூளை வைத்து சுருட்டி, ஒரு முனையை நூலால் கட்டி மறுமுனையில் நெருப்பிட்டுப் புகைத்தனர். பல்வேறு விதமான மாற்றங்களுக்குப்பின் 1900 ஆண்டு வாக்கில் குஜராத்தில்தான் தற்போது நாம் காணும் வடிவில் பீடி தயாரிக்கும் முறை தொடங்கியது. பின்னர் நாட்டின் பிற பகுதிகளுக்கும் பரவியது.

திருச்சிராப்பள்ளியில் பீடி தொழிலகங்கள் (கம்பெனிகள்) இருப்பது போன்று பிற மாவட்டங்களிலும் அதிக அளவில் பீடி தொழிலகங்கள் (கம்பெனிகள்) இருக்கின்றன. அதில் ஒன்றாக சென்னையில்,

"தாஜ்மகால் பீடி, புவுட்டா பீடி, கரீம் பீடி, ஹுசைன் மியான் பீடி, கவர்னர் பீடி, சேட் பீடி" பீடி தொழில் இருந்து வந்துள்ளதை அறியலாம்.

(மதராஸா பட்டினம், ப. 147)

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பீடித்தொழிலானது சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு தொடக்கம் கண்டதாக அறிகிறோம். தொடக்கத்தில் திருச்சிராப்பள்ளி மற்றுமதன் சுற்றுப்பகுதிகள், இனாம்குளத்தூர், குளித்தலை, வையம்பட்டி முதலிய இடங்களில் குடிசைத் தொழிலாகவும், மேலும் திருச்சிராப்பள்ளியில் பல தொழிலகங்களாகவும் உருவாயின. 1981-82ஆம் ஆண்டுக்குரிய அரசு அறிக்கை ஒன்று திருச்சிராப்பள்ளியில் மட்டும் 22 தொழிற்சாலைகள் இருந்ததாகத் தெரிவிக்கிறது. அவையாவன,

"305 பி.எஸ். ஜாடி பீடி, சன் பீடி, சூரியன் பீடி, 903 ஸ்டீம் பீடி, டைமன் பீடி, ஏ.கே.பீடி, சிப்பி பீடி, ஹாட்டின் பீடி, ரேடியோ பீடி, மிரர் பீடி, இன்ஜின் பீடி, 222 பீடி, சர்கஸ் சிங்கம் புலி மார்க் சுருட்டு & கோ, 22X22 செரஸ்ட் & கோ (சுருட்டு), ஆர்மி சின்டிகேட் (சுருட்டு), என் வயலன்ட் &

**கோ (சுருட்டு), ஜெங்டார் & கோ (சுருட்டு), விசிரி மார்க் சுருட்டு & கோ, புலிக்கொடி மார்க் (சுருட்டு), எம்.ஜி.கோஸ் மிரர் பீடி கம்பெணி" போன்றவைகளாகும்.**

(Vimala Margaret Kalaiselvi, C., p. 43)

**ஆனால் காலக்கிரமத்தில் தொழிற்சாலைகள் பல பீடி தயாரிப்பிலிருந்து மறைந்துபோக தற்போது திருச்சி நகரில் கீழ்க்கண்ட பெரிய நிறுவனங்களில் மட்டும் பீடி சுற்றும் தொழில் நடைபெற்று வருகிறது.**

**1.MSN 222 பீடி, 2.305 பீடி, 3.903 ஸ்டீம் பீடி, 4.நியூ ஏ.கே. பீடி, 5.சிப்பி பீடி, 6.இன்ஜின் பீடி, 7.ரசூல் 312 பீடி முதலியனவாகும்.**

**(அக்பர் உசேன், அ., ப. 232)**

திருச்சிராப்பள்ளியில் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள் புகையிலை சங்கம் ஒன்றை நிறுவினார் என்பதற்கான செய்தி அவரது வாழ்க்கை வரலாற்று நூல் ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

"திருச்சியிலே பீடி, பொடி, புகையிலை, சுருட்டு வியாரிகளின் குறைகளை உணர்ந்து, அவைகளைப் போக்கத் "திருச்சி புகையிலை வியாபாரிகள் சங்கம்" என்ற ஒரு சங்கத்தை முதன்முதலில் தோற்றுவித்தார்"

(திருச்சி விசுவநாதம் (வாழ்க்கை வரலாறு), ப. 11)

இந்திய சுதந்திரம் மற்றும் இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டதோடு மட்டுமல்லாமல் புகையிலை சார்ந்த தொழிலாளர்களுக்கும் தொழிலுக்கும் பாடுபட்டுள்ளார் என்பதை அறிய முடிகிறது. இந்தி எதிர்ப்புப் போராட்ட வரலாற்றில் திருச்சி, இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் மூளையாக - எல்லாப் போர்முறைத் திட்டங்களும் தீட்டப்பட்ட களமாக அமைந்தது. இதை முன்னெடுத்தோர் வரிசையில் கி.ஆ.பெ.விசுவநாதம் பிள்ளை அவர்களுக்கு பெரும் பங்கு உண்டு. "திருச்சி உறையூரில் 1938 ஆகஸ்ட் 1-ம் தேதி புறப்பட்ட இவர்கள் வழிநெடுக பிரசாரம் செய்துகொண்டு நடந்தே சென்றனர். 42 நாள்கள் நடந்து 577 மைல்கள் கடந்து, சென்னை திலகர்

கட்டத்தை (சீரணி அரங்கம் இருந்த இடம்) செப்டம்பர் 11-ல் வந்தடைந்தனர்” என்பது குறிப்பிடத்தக்கது.

(திருச்சிராப்பள்ளி ஊறும் வரலாறும், பக். 245-246)

**பீடித்தொழில் நிறுவனங்களின் சமூகப் பங்களிப்புகள்**

**பீடித் தொழில் நிறுவனங்கள், தங்கள் நிறுவனங்களுக்கும், தங்கள் நிறுவனங்களைச் சுற்றி உள்ள ஏழை எளியோருக்கும் சாதி, மதங்களைக் கடந்து கல்வி, திருமணம், பண்டிகைகளுக்கு புதிய ஆடைகள் வழங்குதல் என்று பல்வேறு பொதுச் சேவைகளிலும் ஈடுபட்டுள்ளார்கள். எடுத்துக்காட்டாக,**

“ஜமால் முகமது கல்லூரியின் கலையரங்கம் கட்டுவதற்கு நிதியுதவி வழங்கியவர்கள், டான் ஸ்ரீ டத்தோ ஹாஜி SOK. உபயத்துல்லாஹ் மற்றும் நைனா முகமது & சன்ஸ், ஹாஜி பகீர் முகமது - ஜனாப் N.B.அப்துல் கஃபூர் குடும்பம் (903 ஸ்டீம் பீடி) ஆவார்கள்.”

(The Jamal Silver Jubilee Souvenir (1978-1979), ப. 134)

மேலும்,

“ஜமால் முகமது கல்லூரியில் வணிகவியல் முதுநிலை வகுப்புகளுக்காக, ஹாட்டின் பீடி நிறுவனத்தின் சார்பாக 1,00,000 லட்சம் ரூபாய் செலவில் ‘ஹாட்டின் பிளாக்’ என்ற கட்டடத்தை கட்டித்தந்துள்ளார்கள்.”

(The Jamal (1971-1972), ப. 3)

**இவை மட்டும் அல்லாது தொழிலாளர்களின் தேவைகளை அறிந்தும் உதவி வந்துள்ளனர்.**

**பீடி தயாரிக்கும் முறை**

**பீடி சுற்றுவதற்கான ‘டெண்டு’ இலைகள் இரவில் தண்ணீரில் ஊர வைத்து பதப்படுத்தப்படுகிறது. மறுநாள் காலையில் பதப்படுத்தப்பட்ட இலை, பீடி சுற்றுவதற்கு ஏற்ற வகையில் வெட்டப்படுகிறது. அதில் புகையிலைத் தூள் வைத்து கையினால் நன்கு சுருட்டப்படுகிறது. இதன் ஒரு முனை (வாயில் வைப்பது) நூலால் கட்டப்படும், மறுமுனை (தீயுடன் புகைக்கும் முனை)**

சிறியதொரு குச்சியின் உதவிக்கொண்டு அழுத்தி மூடப்படும். இவ்வாறு சுற்றப்பட்ட பீடிகள் 23 அல்லது 24 என்ற எண்ணிக்கையில் (பீடிகள் கொண்ட) கட்டுகளாகக் கட்டப்பட்டு, சற்று தீயில் சூடேற்றப்பட்டு புகைப்பதற்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்படுகின்றன. பின்னர் அவை பெரிய கட்டுகளாக கட்டப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. தயாரிக்கப்படும் பீடியின் நீளம் மற்றும் பருமன் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் மாறுபடும். இதற்கேற்ற வகையில் பீடி சுற்றப்படும்.

(தகவலாளர்: நூரி, நாள் 01.11.2021)

**பீடித்தொழிலாளர்கள்**

“வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் தொழிலாளர் நிலைக்குழு அறிக்கையில் (2005) இந்தியாவில் பீடித் தொழிலில் சுமார் 45 மில்லியன் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளதாகவும், அதில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் மத்திய பிரதேசத்திலும் (18.3%) அதனைத் தொடர்ந்து ஆந்திரப் பிரதேசம் (14.4%) மற்றும் தமிழ்நாட்டிலும் (13.8%)“ உள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளது.

(Selim Jahangir, p.1)

பீடித்தொழில் இந்தியாவில் தொடங்கிய காலம்தொட்டு இன்றுவரை அதன் வளர்ச்சியில் பெண் தொழிலாளர்களே முக்கிய அங்கம் வகிக்கின்றனர். பீடி சுற்றும் தொழில் பெண்களுக்கு ஏற்ற எளிதான தொழில் ஆகும். இதற்குப் படிப்புத் தேவையில்லை. முதலீடும் தேவையில்லை. தம்பிகளைப் படிக்க வைக்கவும் குடும்பப் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் வளர்இளம்பெண்கள் படிப்பை இடை நிறுத்திவிட்டு இந்தத் தொழிலை மேற்கொண்டனர். திருமணமான பெண்கள் வீட்டில் ஓய்வாக இருக்கும் சமயத்தில் குடும்பத்திற்குக் கூடுதல் வருமானம் கிடைக்கும் என்பதாலும் அவர்களும் இத்தொழிலில் ஈடுபடுகின்றனர். பீடித்தொழிலில் பணிபுரியும் ஆண்களுள், பீடி சுற்றும் வேலைசெய்பவர்கள் குறைவே ஆகும். தொழிற்சாலையில் மூலப்பொருட்களைக் கையாளுதல், தயாரான பீடிகளை விற்பனைக்கு அனுப்புதல் போன்ற பணிகளில் ஆண்கள் அதிகமாகப் பணிபுரிகின்றனர்.

பீடி தயாரிப்பு நிறுவனங்களும் பீடி சுற்றும் வேலையில் பெண்தொழிலாளர்கள் ஈடுபடுவதையே விரும்புகின்றனர். அவர்கள் வேலை செய்ய தொழிற்சாலை போன்ற இடம் தேவையில்லை.

**அதனால் தொழிலாளர்கள் அவர்களது வீட்டிலிருந்தபடியே தயாரிப்புப் பணியை மேற்கொள்கின்றனர். "30** நாளில் பீடி சுற்றுவதற்கு இவர்களுக்கு இவ்வளவு பணம் என்று நிருணயிக்கப்படுகிறது**"**

**(புகை உடல் நலத்திற்கு பகை, ப. 36)**

**ஆனால் பெரும்பாலும் தாங்கள் சுற்றிய தயாரிப்புகளை நிறுவனங்களில் ஒப்படைத்து தினக்கூலியாகவும், வாரக்கூலியாகவுமே பெற்றுக்கொள்கின்ற வழக்கம் நடைமுறையில் இருந்து வந்துள்ளது என்பது ஆய்வாளர் கண்ட கள முடிவாகும். பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படும் கூலி குறைவு. ஆனால் அவர்கள் தங்களது உடல்நலம், உரிமை போன்றவை குறித்து எந்தவித கோரிக்கைகளையும் பெரிதாக வைப்பதில்லை, அதற்கான விழிப்புணர்வும் அவர்களிடத்தில் இல்லை. இது தொழிலதிபர்களைப் பாதிப்பதில்லை. மேலும் பெண்தொழிலாளர்கள் தங்களது குடும்பத்திலிருந்து சங்கிலித் தொடராக தொடர்ந்து தொழிலாளர்களை அளித்து வருவதாலும் பெண் தொழிலாளர்கள் தொடர்ந்து இருப்பதற்கு ஆதரவு கிடைக்கிறது.**

**முஸ்லிம் பெண்கள் மற்றும் சமூதாயத்தின் அடித்தளத்தில் உள்ள இனங்களைச் சேர்ந்த பெண்கள் பீடி சுற்றும் வேலையில் அதிகம் ஈடுபட்டுள்ளனர். பொருளாதாரத்தில் நலிவுற்ற பெண்கள் இதனை விரும்பியே ஏற்றுக்கொண்டுள்ளனர் எனலாம்.**

**இலக்கியத்தில் புகையிலை**

**18**ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காயல்பட்டணம் "அல்வலிய்யுல்காமில் அல்ஆரிபுபில்லாஹ் **ஸாம் ஷிஹாபுத்தீன் வலீ நாயகம்"** அவர்களால் 'தம்பாக் மாலை' என்ற சிற்றிலக்கியம் **அறபுத் தமிழில்** இயற்றப்பட்டது. பிற்காலத்தில் இதனைத் தமிழில் மொழிபெயர்த்து **1964**ஆம் ஆண்டில் வெளியிட்டவர் காயல்பட்டணத்தைச் சேர்ந்த பி.இ.மு.க. சாகுல்ஹமீது ஹாஜியார் ஆவார். அப்போது இந்த நூலின் விலை **38** பைசா என்பது குறிப்பிடத்தக்கது. இந்நூலில் ஆசிரியப்பாவில் அமைந்த நான்கு அடிகள் கொண்ட **106** பாடல்கள் உள்ளன. புகையிலையின் தீமையை விவரித்து

மக்களை அதிலிருந்து விலக்கும் பொருட்டு கூறப்படும் உபதேசங்களாக இந்நூல் அமைந்திருக்கிறது. அதிலிருந்து ஒரு பாடலில்,

கீழக்கரை தனில் என் சொல் கேட்டு
ஹிம்மத்தாய் விட்டார் இச்செயலை
வாழும் கடை தனில் வைத்து விற்க
மறுத்தார்கள் சிலர் ரஹ்மத்தாமீன்
(தம்பாக் மாலை, பா.35)

இவரின் அறிவுறுத்தலைக்கேட்டு சில வியாபாரிகள் பணத்தைக் கருத்தில்கொள்ளாமல் புகையிலை விற்பனையை உறுதியாக விட்டுவிட்டார்கள். அவர்களுக்கு இறைவனின் அருட்கொடைகள் பொழியட்டுமாக என்பது இப்பாடலின் கருத்தாகும். சீனிச்சர்க்கரைப் புலவர் இயற்றிய ‘புகையிலை விடு தூது’ இலக்கியம் 1939இல் உ.வே.சாமிநாதையர் அவர்களால் பதிப்பிக்கப்பட்டது. இதில் மொத்தம் 59 கண்ணிகள் உள்ளன. அவற்றுள் புகையிலையைப் பற்றி 53 கண்ணிகளில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இந்திரன் பிரம்ம தேவனைப் பார்த்து உலகத்தில் எது சிறந்த வஸ்து என்று கேட்டபோது, பிரம்மனுக்கு நான்கு தலைகள் இருந்ததின் காரணமாக தமாகு, பொகாகு, ஹோகஸொப்பு, புகையிலை என்று ஹிந்துஸ்தானி, தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகிய மொழிகளில் பதில் சொன்னார் என்று தன் நூலின் வழி நூலாசிரியர் விவரிக்கிறார். மும்மூர்திகளான சிவன், விஷ்ணு, பிரமன் ஆகிய மூவரிடமும் பெரிய விவகாரம் ஏற்பட்டுவிட்டது. அதில் பிரம்மன் வெற்றிபெற்றதாக அமைகிறது. இவ்விடத்தில் வரும் பாடலாக,

சீர்தந்த மாநிலத்திற் செல்வப் பயிர்தழைப்ப
நீர்தந்த பச்சை நிறங்கொண்டே - ஏர்தந்து
கார மணைந்து கனநீரிற் கண்கவர்ந்து
பாரை மணந்து படியளந்து - சாரமுடன்
எல்லார்க்கு மாலா யிசைந்து பரந்தோங்கிப்
பல்லா யிரவடிவம் பாரித்தே - அல்லாமல்
அம்புகையிற் சாரங்க மான தனுவெடுத்துத்
தம்ப வரிவடிவந் தானுகிச் சொம்புடனே
(புகையிலை விடு தூது, கண்ணி. 1-4)

மேற்கண்ட பாடலில் திருமாலும் புகையிலையும் சிலேடையாக காட்டப்பட்டுள்ளது. இலையின் நிறம், காரத்தன்மை, பல வடிவம் கொண்டதாகவும் இருக்கிறது என்பதை இங்கு குறிப்பிட்டு கூறப்படுகிறது.

**முஸ்லிம் பெண் தொழிலாளர்கள்**

**பீடி சுற்றும் தொழிலில் முஸ்லிம் பெண்களே மிகவும் அதிக அளவில் உள்ளனர். அவர்களது சமூக, கலாச்சார அமைப்பும். வீட்டிலிருந்தபடியே செய்வதற்கு ஏற்ற வேலையாக இது இருப்பதால் இத்தொழில் அவர்களிடம் வரவேற்பைப் பெற்றுள்ளது. பீடி சுற்றும் வேலையைக் கைக்கொண்டுவிட்ட இத்தகைய பெண்களின் வாழ்க்கையே பீடி சுற்றும் வேலையை மையமாகக் கொண்டு அமைகிறது. பெரியவர்களுடன், பெண் குழந்தைகளும் சிறுவயதிலிருந்தே இத்தொழில் ஈடுபடுத்தப்படுகின்றனர். பல குடும்பங்கள் இதில் கிடைக்கும் வருமானத்தையே தங்களது குடும்ப பராமரிப்பிற்கு நம்பிஇருக்க வேண்டிய நிலையும் காணப்படுகிறது.**

**பிற பெண் தொழிலாளர்களைப் போன்று, முஸ்லிம் பெண் தொழிலாளர்களும் காலை முதல் முன்னிரவு வரை பீடி சுற்றும் தொழிலிலேயே கவனம் செலுத்துகின்றனர். ஒருவர் தோராயமாக 10 மணி நேரம் உழைத்தால்தான் சுமார் 1000 முதல் 1500 பீடிகள் சுற்ற முடியும். இதற்குக் கூலியாக ரூபாய் 180 வரை கிடைக்கிறது. ஆக ஒருவர் மாதத்திற்கு ரூ. 4,000 முதல் ரூ. 5,000 வரை கூலியாக பெறுகின்றார்.**

**(தகவலாளர்: சைதானி பீவி, நாள் 26.02.2025)**

**இத்தகைய தொழிலாளர்களுக்கு மூலப்பொருட்கள் தொழிற்சாலையிலிருந்து நேரடியாக வழங்கப்படுவதில்லை. தொழிற்சாலையால் நியமிக்கப்படும் இடைத்தரகர்களின் (Agents) கிடங்குகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் குறைந்தது 10 கிடங்குகள் / இடைத்தரகர்கள் உள்ளனர். இந்த கிடங்குகள் மூலம் முதன்மைப் பொருட்கள் (Raw Meterials) தொழிலாளர்களுக்கு வழங்கப்படும். தொழிலாளர்கள் மூலம் தயாரிக்கப்பட்ட பீடி கட்டுகள் பெறப்பட்டு அவர்களுக்கான உரிய கூலி ஒவ்வொரு வாரமும் வழங்கப்படும்.**

முஸ்லிம் பெண் பீடித்தொழிலாளர்களின் வாழ்வியல்

பெரும்பாலும் வறுமைக்கு ஆட்பட்டிருக்கும் முஸ்லிம் குடும்பங்கள் இத்தொழிலில் ஈடுபடுகின்றனர். இதில் திருச்சிராப்பள்ளியும் விதிவிலக்கல்ல. பொதுவாக முஸ்லிம் பெண் குழந்தைகளை அதிகம் படிக்க வைப்பதில்லை. அதிலும் பருவ வயது அடைந்துவிட்ட பெண்களை மிகப் பெரும்பாலோர் படிப்பதற்கு அனுப்புவதில்லை. இதுவும் கூட பீடித்தொழிலில் ஈடுபட்டு இருக்கும் குடும்பங்களுக்கு சாதகமாகிறது. பெண் குழந்தைகள் சிறுவயதிலிருந்தே பீடி சுற்றும் வேலையில் பழக்கப்படுத்தப்படுகின்றனர். படித்துக் கொண்டிருக்கும் பெண் குழந்தைகள் கூட குடும்ப வருமானத்திற்கு உதவியாக இருக்கும் பொருட்டு படிப்பிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்படுவது மிகவும் சாதாரன நிகழ்ச்சி. பின்னர் அவர்களது உலகமே ‘பீடி சுற்றுதல்தான்’. இந்தத்தொழிலுக்காகவே நேர்ந்துவிடப்பட்டவர்கள் என்பது போன்றதொரு அவலநிலை, அவர்களுக்கு எந்தவித பொழுதுபோக்கும் இருப்பதில்லை. இத்தகையதொரு வாழ்க்கைச் சூழலில் சிறுவயது முதலே சிக்கி விடுகின்றனர்.

(தகவலாளர்: நூரி, நாள் 01.11.2021)

பீடி சுற்றும் தொழிலில் ஈடுபட்டு திருமண வயதை அடைந்த முஸ்லிம் பெண்களுள், அதிக எண்ணிக்கையில் பீடி சுற்றும் பெண்களுக்கு, திருமண சந்தையில் மதிப்பு அதிகம். அவரவர் தகுதிக்கேற்ப கைக்கூலி என்னும் வரதட்சணை கொடுத்தே திருமணம் நிச்சயிக்கப்படுகிறது. இதில் மேலே சொன்ன வகைப் பெண்களுக்கு வரதட்சணையிலிருந்து கொஞ்சம் கருணை கிடைக்கும், ‘காலமெல்லாம் பொன் முட்டையிடும்’ வாத்து என்ற தகுதி போலும்.

பீடி சுற்றும் வேலையில் இருக்கும் முஸ்லிம் குடும்பங்களில் மிகப்பெரும்பாலானோர் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்கள். எனவே இதுவும் இஸ்லாமிய சமுதாயத்தின் ஒரு தனி ரகம், கொடுக்கல், வாங்கல் என்ற திருமணப்பரிவர்த்தனைகள் பெரும்பாலும் ஓர் இனக்குழு அடிப்படைப் போன்று இவர்களுக்குள் நடைபெறுவதைக் காணலாம். இவர்கள் சமுதாய அந்தஸ்தில், பொருளாதாரத்தில் சற்று உயர்நிலையிலுள்ள நடுத்தர வர்க்கத்தினரிடம் கூட தொடர்பும், உறவும் கொள்ள முடியாத நிலையைக் காணலாம். இந்தத் தொழிலில் இருந்த ஒருவர்

பொருளாதார ரீதியில் உயர்நிலை அடைந்துவிட்டால் அவரும் கூட அவர் சக மக்களைப் பற்றி அதிகம் கவலைப்படுவதில்லை. எனவே இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளக் குடும்பங்கள் அவர்களுக்குள்ளேயே ஒரு உலகத்தை உருவாக்கிக் கொண்டு இருக்கின்றனர். மதம் சார்ந்த விஷயங்களில் இவர்களில் அனைவரிடமும் நல்லிணக்கம் நிலவுவதும் காணத்தக்கதாகும்.

பீடி சுற்றும் தொழிலில் இருக்கும் பெண்கள் பல்வேறுவிதமான சுகாதாரக் கேடுகளுக்கு ஆளாகின்றனர். பீடி தொழிலாளர்களுக்கு ஏற்படும் பல்வேறு உடல்நலப் பிரச்சினைகளாக,

"ஆஸ்துமா, காசநோய், வாய்வழி புற்றுநோய், நாசோபார்னீஜியல் புற்றுநோய் மற்றும் குரல்வளை புற்றுநோய், கருக்கலைப்பு, இனப்பெருக்கப் பாதையில் தொற்று (சிறுநீர் பாதையில் தொற்று) குழந்தை எடை குறைவாகப் பிறத்தல் போன்ற மகளிர் நோய் பிரச்சினைகள் மற்றும் தலைவலி, படபடப்பு, கண் மற்றும் தோல் பிரச்சினைகள் போன்ற பிற பிரச்சினைகள் இதில் அடங்கும்."

(Yamini Kanipakam.* p.3)

பீடித் தொழில் நிறுவனங்கள் மூலம் கிடைக்கும் காப்பீட்டு மருத்துவ வசதி மற்றும் அரசு வழங்கும் சில சலுகைகள் இருப்பினும் அதனை முஸ்லிம் பெண் தொழிலாளர்கள் பயன்படுத்திக்கொள்வதில்லை. பெரும்பாலானோருக்கு இத்தகைய திட்டங்கள் குறித்து தெரிவதுகூட இல்லை. இத்தகைய சூழலில் குடும்ப பாரம், வறுமை, வாழ்க்கைப் போராட்டம் ஆகிய காரணங்களால் முஸ்லிம் பெண் தொழிலாளர்களை பீடி சுற்றும் தொழில் சுவீகரித்துக்கொண்டு அதன்போக்கில் நடைபோட்டுக் கொண்டு வருகிறது.

கி.பி.18ஆம் நூற்றாண்டு இடைப்பகுதியிலிருந்து ஆற்காடு நவாபுகளின் ஆட்சி திருச்சிராப்பள்ளியை மையமாக வைத்து உருவானபோது மாநிலத்தின் அப்போதைய வடபகுதிகளிலிருந்து முஸ்லிம்கள் அதிக அளவில் இங்கு குடியேறினர். இவர்களுள் பலர் அரசு சார்ந்த அடிப்படைப் பணிகளிலும், போர்த் தொழில்களிலும், பல்வேறுபட்ட கைத்தொழில்களிலும் ஈடுபடலாயினர். 1800 வாக்கில் ஆற்காடு நவாபுகளின் ஆட்சி அகற்றப்பட்டு, ஆங்கிலேயரின் ஆதிக்கம் தொடங்கியபோது பலர் தங்களது வேலை வாய்ப்புகளை இழந்து பல்வேறு குறுந்தொழில்களை செய்பவர்களாயினர். இந்நிலை காலப்போக்கில் அவர்களது

**பொருளாதாரநிலையை பாதித்ததால் குடும்ப வருமானத்தைப்பெருக்க வீட்டிற்குள் முடங்கிக்கிடந்த பெண்களும் பொருளாதார முனைப்பால் கைத்தொழில்களில் அக்கரைக்காட்ட தலைப்பட்டனர். இந்த வகையில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அவர்களுக்குக் கிடைத்த ஒரு நல்வாய்ப்பு "பீடி சுற்றும் தொழில்" ஆகும். திருச்சிராப்பள்ளி பகுதியில் பீடி சுற்றும் தொழிலில் ஈடுபட்டுள்ள மிகப்பெரும்பாலான குடும்பங்கள் உருது மொழி பேசுபவர்கள் ஆவார்கள்.**

**பீடித்தொழிலாளர்களின் பொழுதுபோக்கும் விடுகதையும்**

தங்களின் வேலையின்போது பெண்கள் ஒருவருக்கொருவர் விடுகதைக்கூறி தங்களை உற்சாகப்படுத்திக்கொள்வதோடு, மொழி அறிவையும் வளர்த்துக்கொள்கின்றனர். அதில் ஒன்றாக,

"நாலெழுத்துப் பூடு
நடுவே நரம்பிருக்கும்
காலும் தலையும்
கடைச் சாதி - மேலாக
ஒட்டு முதல் எழுத்தும்
ஓதும் மூன்றாம் எழுத்தும்
விட்டால் பரமனுக்கு
வீடு"

(கு. அழகிரிசாமி கட்டுரைகள், ப. 157)

மேலும்,

"புகையிலை என்பதில் நான்கு எழுத்துக்கள் இருக்கின்றனவல்லவா? காலும் தலையும் என்றது புகையிலை என்ற பெயரிலுள்ள முதலும் கடையுமாகிய எழுத்துக்களை; அவை புலை என்பன; புலை என்பதற்குக் கடைச்சாதி என்ற பெயர் வழங்குகின்றதன்றோ? புகையிலை என்ற பெயரில் முதல் எழுத்தையும் மூன்றாம் எழுத்தையும் விட்டுவிட்டால் எஞ்சி நிற்பன கைலை என்னும் இரண்டு எழுத்துக்கள்; கைலை என்பது பரமனின் - சிவபெருமானின் - இருப்பிடமல்லவா? எவ்வளவு அழகான, நயமான சுவையான விடுகதை பாருங்கள்!

(அறிவுக்கு விருந்து, ப. 41)

பழமொழிகள்

**பழமொழிகள் என்பது ஒரு சமுதாயத்தில் நீண்ட காலமாக புழக்கத்தில் இருந்து வரும் அனுபவ குறிப்புகளே ஆகும். குறிப்பாக தமிழ் மொழி பேசுபவர்களுக்கு மத்தியில் ஏராளமான தமிழ் பழமொழிகள் வழக்கத்தில் உள்ளன. தமிழகத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் பேசும் பழமொழிகளை கேட்டு அறிந்த உருது முஸ்லிம்கள் தங்கள் பேச்சு வழக்கில் தமிழ் பழமொழிகளையும் உருது பழமொழிகளையும் பயன்படுத்தி வருகின்றனர்.**

**இதனால் நாம் தமிழ் பழமொழிகள், உருது பழமொழிகள் என்று இரண்டு வகையாக பிரிக்கலாம்.**

**எடுத்துக்காட்டாக,**

**தமிழ் பழமொழி**

பொம்பள சிரிச்சா போச்சு; புகையிலை விரிச்சா போச்சு

தாலாரொம் தொண்டி எக்மோர் வண்டி

பட படத்த பீவிக்கு பட்ட பகல்ல ஜுல்வா

**உருது பழமொழி**

கர் ஜாவ்ஜாவ் கத்தா, கபர் ஆவ்ஆவ் கத்தா (வீடு போபோ என்கிறது, காடு வாவா என்கிறது)

பாப் தேக்கேத்தோ சாத் கர்க்கா பாப் லப்பட்டுங்கா

காய்க்கா சிடி புராணா தின் பிசரி

**(தகவலாளர்: நூரி, நாள் 01.11.2021)**

பீடித்தொழிலாளர்களின் வீட்டு வைத்திய முறைகள்

**மருத்துவமனைகள் அதிகம் இல்லாத முற்காலத்தில் மக்கள் பெரும்பாலும் தங்கள் வீடுகளில் உள்ள பொருட்களைக் கொண்டே மருத்துவம் செய்து கொள்வார்கள் இதற்கு வீட்டு வைத்திய முறை என்று பெயர்.**

“புகையிலை முதன்முதலில் அக்பரின் அரசவையில் அறிமுகப்படுத்தப்பட்டபோது, அதனைக் குறித்து அரசவை மருத்துவரிடம் அக்பர் கருத்து கேட்டாராம். தம்முடைய மருத்துவ நூல்களில் புகையிலை பற்றியச் செய்தி ஒன்றுமில்லை என்றும், எனவே அக்பர் அதைப் பயன்படுத்தக்கூடாது” என்றும் அவர்கள் கூறியதை இங்கு எண்ணிப்பார்க்கலாம்.

(அந்தக் காலத்தில் காப்பி இல்லை, ப. 48)

"சளி பிடிக்கும்போது பெரியவர்களுக்கு தண்ணீரில் தைலம் போட்டு ஆவி புடித்தலும், குழந்தைகளுக்கு ஓம இலை, வெத்தலை இடித்து சாரு குடித்தலும் மருந்தாக இருக்கின்றது. இன்றளவும் கூட மக்களிடம் கண் திரிஷ்டி கழிக்கும் வழக்கம் - கரிகட்ட, மொளகா, மஞ்சத்தூள், தண்ணீரில் கலந்து தட்டில் வைத்து, பிறகு காபடியில் பேப்பரைப் போட்டு நெருப்பை வரவழைத்து வலது புறம் மூன்று தடவை, இடது புறம் மூன்று தடவை சுற்றவும். பிறகு மூன்று முறை துப்பவும், அடுத்தது காபடியை தட்டில் கவிழ்த்தியப் பிறகு அந்த இடத்தில் இருந்து விலகவும்". இப்படி பல வீட்டு வைத்திய முறைகள் இருக்கின்றன.

(தகவலாளர்: தில்சாத் பேகம், நாள் 17.09.2025)

**உறவுச்சொற்கள்**

பீடித் தொழிலாளர்கள் தங்களுக்கு மத்தியில் பயன்படுத்துகின்ற உறவுமுறைச் சொற்கள்:

அப்பா -பா; அம்மா - அம்மா (அம்மி); அக்கா - ஆப்பா; தங்கச்சி - பான்; அண்ணன் - பாய்; தம்பி - சோட்டாபாய்; சித்தப்பா - கலை; சின்னம்மா - காலா; (அவர்களின் பிள்ளைகள் - காலாகா பேட்டா, - பட பாய்கா பேட்டா) அன்னி - பாவஜ் (பாபி); பெரியப்பா -தாயபா; சித்தப்பா - சொட்டாபா; சித்தப்பா - சிச்சா; அம்மாவின் அப்பா - தாத்தா; அம்மாவின் அம்மா - பாட்டி (நானி); அப்பாவின் அப்பா - தாதா; அப்பாவின் அம்மா - தாதி; அப்பாவின் உடன் பிறந்த அக்கா - அத்தை (புப்பு); மாமா - புப்பா; பெரிய அத்தை - படாபுப்பு; சிறியஅத்தை - சொட்டாபுப்பு; ஆகிய பல சொற்கள் புழக்கத்தில் உள்ளதை அறியலாம்.

(தகவலாளர்: ரோசன் பேகம், நாள் 30.10.2025)

**பீடித்தொழிலாளர்களின் நாட்டுப்புறப் பாடல்கள்**

**நாட்டார் பாடல்கள் அல்லது நாட்டுப்புறப் பாடல்கள் எனப்படுவது தாலாட்டு முதல் ஒப்பாரி வரை பாடக்கூடியதாக அமைகிறது. தமிழ்பேசும் முஸ்லிம் திருமணத்தில் பாடல்கள் அதிகமாக பாடப்படுவது இல்லை. உருது பேசும் முஸ்லிம்கள் தங்களின் திருமணத்தின்போது பாடக்கூடிய பாடல்கள் உள்ளன. திருமணத்திற்கு இரண்டு நாட்கள் முன்பாக, முதலில் மஞ்சள் நலுங்கும், அடுத்த நாளில் எண்ணெய் நலுங்கும் எடுக்கும்போது பாடக்கூடிய நலுங்குப் பாடல்கள் உள்ளன. இவை குறிப்பாக இரவு நேரங்களில் நடைபெறுகின்றன. அதில்,**

**மஞ்சள் நலுங்கு**

**பிஸ்மில்லா மொலகா அவ்வல்நா மொலகா**

**ஏ ஜவ்கி ஆ பைட்டு பெங்கலன்பெல் ஏ பிரு**

**அர்சேக்கா சிபாகா...**

**எண்ணெய் நலுங்கு**

அர்ச நலாவோ பர்ச நலாவோ

பர்சம்கா தேல் ஜடாவோ

கோனு சுவாகின் கோனு சுவாகின்

அஜ்ரத் பீவி சுவாகின்...

(தகவலாளர்: தித்திப் பாத்திமா, நாள் 26.02.2022)

இப்பாடல்கள் ஆகும்.

மேலும், தனது அரபு மதரஸாக்களில் இஸ்லாமிய சமய பாடங்கள் படிக்கும்போது அஜ்ரத் மார்களுக்காகப் (அரபுப் பாடம் சொல்லிக்கொடுப்பவர்) பாடப்பட்ட பாட்டாக,

சலாம் சலாம் போய் வாறேன் எங்கள் உஸ்தாதே

சாட்சி நாங்கள் போற்றி உங்களுக்கு சலாம் சொல்கிறோம்

அடிபணிந்து உன்னை வணங்க அருள் செய்கிறான்

புத்தி மனதில், எங்கள் மனதில் புகட்டி வைக்கிறான்

ஓதாத நாங்கள் வருகிறோம் எங்கள் உஸ்தாதே

சலாம் சலாம் போய் வாறேன் எங்கள் உஸ்தாதே

சாட்சி நாங்கள் போற்றி உங்களுக்கு சலாம் சொல்கிறோம்

வீடு போயி விரைந்து வாறேன் எங்கள் உஸ்தாதே

சாட்சி நாங்கள் போற்றி உங்களுக்கு சலாம் சொல்கிறோம்

காத்து கருப்பு எங்கள் மனதில் கலந்திடாமலே

காத்து நாயகம் ரப்பில் ஆலமீன் அருள் புரிவான்

சலாம் சலாம் போய் வாறேன் எங்கள் உஸ்தாதே...

(தகவலாளர்: கே.சிக்கந்தர், நாள் 04.08.2022)

**என்று பாடப்படுகிறது.**

**முடிவுரை**

“திருச்சிராப்பள்ளியில் பீடித் தொழிலும் முஸ்லிம் பெண் பீடித் தொழிலாளர்களும்” என்ற இக்கட்டுரை முஸ்லிம் பெண் பீடித் தொழிலாளர்களின் வாழ்வியலையும் பொருளாதாரத்தையும் எடுத்துரைக்கிறது. பல்வேறு காரணிகளில் 1980களில் திருச்சியில் 25 பீடி தொழிற்சாலைகள் இயங்கி வந்த நிலையில் தற்போது 10 தொழிற்சாலைகள் மட்டுமே உள்ளன. டெண்டு இலை மூலமாக தமிழகப் பகுதியில் பீடி சுற்றப்படுகிறது. பீடியில் பயன்படுத்தக்கூடிய புகையிலை குஜராத் கர்நாடகாவில் ஆரம்பக் காலங்களில் விளைவிக்கப்பட்டு காலப்போக்கில் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் பயிரிடப்படுகிறது. பீடி தொழிலானது பெண்களின் கைத்தொழிலாக உருவெடுத்து இருக்கின்றது. வீட்டில் இருந்தபடியே செய்வதற்கு ஏற்ற தொழிலாக இருப்பதால் இது பெண்களுக்கு ஏற்ற தொழிலாக உள்ளது. மேலும் ஏழ்மை, சுகாதாரக் குறைவு, குறைந்த வருவாய் போன்ற காரணங்களால் பணியாளர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துவிட்டது. மேலும் இக்கட்டுரையில் புகையிலையின் வரலாறும், திருச்சியில் இயங்கி வந்த பீடித் தொழிற்சாலைகள் குறித்த தகவல்களும் விவரிக்கப்பட்டுள்ளன. பீடித் தொழிலாளர்களுக்கு ஏற்படும் உடல் நலக்குறைவுகளும் பாதிப்புகளும் குறித்து அலசப்பட்டு இருக்கிறது. தம்பாக் மாலை என்ற சிற்றிலக்கியம் அரபுத் தமிழில் இயற்றப்பட்டு அதில் புகையிலை எதிர்ப்பு குறித்து பாடப்பட்டுள்ளது. இதே பாணியில் புகையிலை விடு தூது என்ற இலக்கியமும் குறிப்பிடத்தக்கது. முஸ்லிம் பெண் பிடி தொழிலாளர்களின் வாழ்க்கை வறுமை நிலையிலேயே தொடர்ந்து வருகிறது. இத்தொழிலால் ஆஸ்துமா, காசநோய், வாய்வழி மற்றும் புற்றுநோய் போன்ற பல நோய்களுக்கு ஆளாகின்றனர். புகையிலை குறித்து பல்வேறு பழமொழிகள், விடுகதைகள் ஆகியன எடுத்தாளப்பட்டுள்ளன. 60க்கும் மேற்பட்ட பெண் பீடி தொழிலாளர்களிடம் நடத்தப்பட்ட நேர்காணல் வாயிலாக அவர்களின் பல்வேறு விதமான வீட்டு வைத்திய முறைகள், புழக்கத்தில் உள்ள உறவுச்சொற்கள், பேசக்கூடிய தமிழ் மற்றும் உருது பழமொழிகள், நாட்டுப்புறப் பாடல்கள் ஆகியன கண்டறியப்பட்டுள்ளன. பல்வேறு ஆதாரங்களின் வழியாக திருச்சிராப்பள்ளியில் வாழும் முஸ்லிம் பெண் பீடித் தொழிலாளர்கள் தம் வாழ்க்கையில் வறுமையாலும் பல்வேறு நோய்களாலும் சிரமப்பட்டு கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மை இந்த ஆய்வின் வழியாக வெளிக்கொணரப்படுகிறது.

குறிப்பு நூல்கள்

1. அக்பர் உசேன், அ. திருச்சிராப்பள்ளி மாவட்ட இஸ்லாமியர்களின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார நிலை கி.பி.1947-கி.பி.1997. முனைவர் பட்ட ஆய்வேடு - வரலாற்றுத்துறை, தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி), டிசம்பர்-2002.
2. அழகிரிசாமி, கு. கு.அழகிரிசாமி கட்டுரைகள். தேன்மழைப் பதிப்பகம், சென்னை, 1991.
3. கவிஞர் தந்தலாலா. திருச்சிராப்பள்ளி ஊறும் வரலாறும். விகடன் பிரசுரம், சென்னை, இரண்டாம் பதிப்பு-2022.
4. காமராசு, இரா. புகையிலை வரலாறும் வழக்காறும். உயிர் பதிப்பகம், சென்னை, முதற் பதிப்பு-2023
5. சம்பந்தன், மா.சு. திருச்சி விசுவநாதம் (வாழ்க்கை வரலாறு). பாரி நிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு-1973.
6. சாமிநாதையர், உ.வே. புகையிலை விடு தூது. கபீர் அச்சுக்கூடம், சென்னை, இரண்டாம் பதிப்பு-1956.
7. சுப்பு ரெட்டியார், ந. அறிவுக்கு விருந்து. சௌத் இந்தியா பிரஸ், காரைக்குடி, 1962.
8. தாழை மதியவன். மதரஸா பட்டினம். இலக்கியச் சோலை, சென்னை, இரண்டாம் பதிப்பு-2019.
9. மீனாக்ஷி சுந்தரம், ஆர். பால வாசகம் (ஐந்தாம் வகுப்பு). ஸி.குமாரசாமி நாயுடு & ஸன்ஸ், சென்னை-1939.
10. முகமது இஸ்மாயில், ஈ.பி. தி ஜமால் (1971-1972). ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சி.
11. முகமது இஸ்மாயில், ஈ.பி. தி ஜமால் சில்வர் ஜுப்லி சவானியர் (1978-1979). ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சி.
12. முத்துச்செல்லக்குமார். புகை உடல் நலத்திற்கு பகை. நேஷனல் பப்ளிஷர்ஸ், சென்னை, முதற் பதிப்பு-2009.

13. வேங்கடாசலபதி, ஆ.இரா. அந்தக் காலத்தில் காப்பி இல்லை. காலச்சுவடு பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு-2001.

14. ஸாம் ஷிஹாபுத்தீன் வலீ நாயகம். தம்பாக் மாலை. வெளியிடுவோர்: பி.இ.மு.க.சாகுல்ஹமீது ஹாஜியார், காயல்பட்டணம், 1964.

15. Selim Jahangir. "Life Worlds of the Bidi Workers in Mushidabad District of West Bengal: A Qualitative Assessment". International Journal of Innovative Studies in Sociology and Humanities, ISSN:2456-4931 (Online), Issue-3, No.-6, June 2018, pp. 21-26.

16. Vimala Margaret Kalaiselvi, C. The Position of Muslim Women Beedi Workers in Kajamalai (Tiruchirapalli District). PG-Master of Philosophy Thesis, Department of Historical Studies, Mother Terasa Women's University, Kodaikanal-1989.

17. Yamini Kanipakam. "Association between Occupational Exposure to Tobacco Dust and Absolute Telomere Length: A Cross-sectional Study on Female *Beedi* Workers." World Journal of Dentistry, Issue -5, Volume-12, Year 2021, https://doi.org/10.5005/jp-journals-10015-1854

**தகவல் கூறியவர்கள்**

18. சிக்கந்தர், கே., வயது 84, நாள் 04.08.2022, வரகநெறி, திருச்சி
19. சைதானி பீவி, வயது 50, நாள் 26.02.2022, நத்தர்சா தர்கா, திருச்சி
20. தித்திப் பாத்திமா, வயது 65, நாள் 26.02.2022, நத்தர்சா தர்கா, திருச்சி
21. தில்சாத் பேகம், வயது 54, நாள் 17.09.2025, அண்டகொண்டான் தெரு, திருச்சி
22. நூரி, வயது 75, நாள் 01.11.2021, அண்டகொண்டான் தெரு, திருச்சி
23. ரோசன் பேகம், வயது 60, நாள் 30.10.2025, காமராஜர் தெரு, ஆயில்மில், திருச்சி



**நேர்காணல் - தித்திப் பாத்திமா, வயது 65, நாள் 26.02.2022, நத்தர்சா தர்கா, திருச்சி**